Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

THURSDAY, JANUARY 30 2025

வியாழக்கிழமை 30, ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 148 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## அரிசி வர்த்தகர்கள் முஸ்தீபு



அரிசி தொடர்பான பிரச்சினைக்குரிய நிலைமைக்கு தீர்வுகளை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக அரிசி சந்தையில் இருந்து விலகி போராட்டத்தில் ஈடுபட புறக்கோட்டை அரிசி வியாபாரிகள் தீர்மானித்துள்ளனர்.

நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகளின் சோதனைகள் அரிசி வியாபாரத்திற்கு ஒரு தடையாக இருப்பதாகவும், அரசாங்கம் அரிசி பிரச்சினைக்கு சரியான தீர்வை வழங்கியவுடன் நுகர்வோர் விவகார அதிகாரசபை அந்த சோதனைகளை செயல்படுத்த வேண்டும் என்று வர்த்தகர்கள் கருதுவதாகவும் புறக்கோட்டை அரிசி வியாபாரிகள் கூறுகின்றனர்.

# அர்ச்சுனா எம்.பி கைது



### வி.ஐ.பி விளக்குகளை ஒளிரவிட்டு, ஏனைய வாகனங்களின் போக்குவர்த்துக்கு இடையூறு விளைவித்துள்ளார்

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சாவகச்சேரியில் வைத்து புதன்கிழமை (29) கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுர போக்குவரத்து பொலிஸாருக்கு ஜனவரி 20 ஆம் திகதியன்று தலாவ பகுதியில் வைத்து இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில், அனுராதபுர விசேட பொலிஸ் குழுவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி 21ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்காக, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு ஜனவரி 20ஆம் திகதியன்று அர்ச்சுனா எம்.பி பயணித்துக் கொண்டிருந்தார்.

தனது வாகனத்தில் வி.ஐ.பி. (VIP) விளக்குகளை ஒளிரவிட்டு மற்ற வாகனங்களின்போக்குவரத்திற்கு இடையூறாக வாகனம் ஒட்டியதற்காக பாராளுமன்ற உறுப்பினரின் வாகனத்தை பொலிஸார், அனுராதபுரத்தில் வைத்து தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன் விளைவாக, பணியில் இருந்த பொலிஸ் அதிகாரிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது பொலிஸ் அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினரின் அடையாள அட்டையைக் கோரியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## “மனப்பாங்கை மாற்றி கொள்ள வேண்டும்”


### பொருளாதார உச்சி மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் மூலதனச் செலவினமாக 1.35 டிரில்லியன் ரூபாயை ஒதுக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், இது அண்மைக் காலத்தில் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு அரசாங்கம் செலவிடும் மிகப்பெரிய தொகையாகும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## குளவி கொட்டியதில் மாணவன் மரணம்



கம்பளை புஸ்ஸல்லாவை பிளக்ஃபொரஸ்ட் தோட்டத்தில் வசிக்கும் சஸ்மிதன் திருச்செல்வம் என்ற மாணவன், குளவி கொட்டுக்கு இலக்காகிய மரணமடைந்துள்ளார். இந்த குளவிக்கொட்டு சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உட்பட எட்டு பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்

## ரிட் மனு விசாரணையில் இருந்து நீதியரசர் விலகினார்



கப்பம் கோருவதற்காக, கொட்டாஞ்சேனை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன் தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ச்சி P2

## மைத்திரியின் ரிட் மனு விசாரணைக்கு வருகிறது

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தனக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை பெப்ரவரி 6ஆம் திகதி முதல் புதிய அமர்வு முன் விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (28) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

### மன்னாரில் துப்பாக்கி பிரயோகம்:

## ஐவருக்கும் விளக்கமறியல்



எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்பாக ஜனவரி 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான், புதன்கிழமை (29) உத்தரவிட்டார். இந்நிலையில், இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், புதன்கிழமை(29) கைது செய்யப்பட்ட மேலும் ஒரு சந்தேக நபரை வியாழக்கிழமை (30) வரை பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

தொடர்ச்சி P2

## “கனிய மணல் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்தி தேவையில்லை”

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்தும் அதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தெரிந்து கொள்ள தென்பகுதியில் இருந்து சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் செவ்வாய்க்கிழமை(28) மன்னாரிற்கு வருகை தந்தனர்.



தொடர்ச்சி P2

## “ஜனநாயகத்துக்கும் சட்டத்திற்கும் முரண்”



ஏ.எஸ். மௌலானா

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அறிவித்தது ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜீப்புடன் மூவர் கைது

இரத்தினபுரி அங்கம்மன என்ற இடத்தில் சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட ப்ராடோ ரக ஜீப்புடன் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் வலான தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த ஜீப் பிரதேசத்தின் முக்கிய அரசியல்வாதியொருவரால் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.



## “மக்கள் பக்கம் நாம் நிற்போம்”

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் குரலை மேலும் மேலோங்கச் செய்து, வலுவான எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் பாராளுமன்றத்தில் கூடினர்.

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பலமான எதிர்க்கட்சியை உருவாக்கி, மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் அனைவரையும் ஒன்று திரட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக கட்சித் தலைவர்களை கேட்டுக் கொண்டார்.

இதன் மூலம் பலமான பாராளுமன்றத்தை உருவாக்க முடியும் என்றும், அரசாங்கத்தின் சிறந்த விடயங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகம் விளைவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராக மக்கள் பக்கம் நாம் முன்நிற்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர்களான அனுராத ஜயரத்ன, சாணக்கியன் இராசமாணிக்கம், மனோ கணேசன், பழனி திகாம்பரம், கயந்த கருணாதிலக, ஜே.சி. அலவத்துவல, அஜித் பி. பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# அர்ச்சுனா எம்.பி கைது

இருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர் அதை வழங்க மறுத்து, இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டுள்ளார்.

போக்குவரத்துச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், சந்தேக நபர், ராமநாதன் அர்ச்சுனா என்ற பெயரில் தனது தேசிய அடையாள அட்டையுடன் நீதிமன்றத்தில் ராமநாதன் அர்ச்சுனா எம்.பி அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஜனவரி 21ஆம் திகதியன்று ஆஜரான போதிலும், இந்த சம்பவம் தொடர்பாக அனுராதபுரம் காவல்துறையினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அசல் பீ அறிக்கையில் சந்தேக நபரின் பெயர் அர்ச்சுனா லோச்சனா என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

ஜனவரி 21ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜரான சந்தேக நபரின் பெயருக்கும், பீ அறிக்கையில் காவல்துறையினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெயருக்கும் இடையில் முரண்பாடு இருப்பதால், ராமநாதன் அர்ச்சுனா சந்தேக நபராக ஆஜராவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நீதவான் அன்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குளவி கொட்டியதில் மாணவன் மரணம்

இந்த மாணவன், புஸ்ஸல்லாவ இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் மூன்றாம் தரத்தில் கல்வி பயின்று வருகிறார்..

சிறுவனின் தாய், தந்தை மற்றும் சகோதரர் உட்பட எட்டு பேர் குளவி கொட்டுக்கு இலக்காகி, அவர்களில் ஆறு பேர் கம்பளை மற்றும் வஹுகபிட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

கம்பளை-நுவரெலியா பிரதான வீதியில் உள்ள அவர்களின் வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு பெரிய மரத்தில் சுமார் ஆறு குளவி கூடுகள் கட்டப்பட்டிருந்த நிலையில், அதன் ஒரு கூட்டில் பறவைகள் கிளறி விட்டதன் காரணமாக இந்த குளவிகள் கலைந்து கொட்டியுள்ளன.

தங்கள் வீட்டிற்கு அருகில் இடம்பெற்ற இந்த தாக்குதலால் அவர்கள் மூவரும் அலறியடித்து ஓடிய போது, அவர்களின் அலறல் சத்தம் கேட்டு ஸ்தலத்துக்கு ஓடியதாய் உள்ளிட்ட அவரது உறவினர்களும் குளவி கொட்டுக்கு இலக்காகினர்.

அயலவர்கள் தீ மூட்டி புகையை மேலெழுப்பி குளவிகளை விரட்டி விட்டு அனைவரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதும், மாணவர் மருத்துவமனையில் உயிரிழந்துவிட்டார்.

## ஐவருக்கும் விளக்கமறியல்

மன்னார் நீதிமன்றத்தின் மூடிய அறைக்குள் தனித்தனியாக அடையாள ஆள் அணிவகுப்பு புதன்கிழமை(29) இடம்பெற்றது.

.இந்த நிலையில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததோடு,பெண் ஒருவர் உள்ளடங்களாக இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கையின் போது பிரதான சந்தேக நபர்கள் உள்ளடங்களாக 5 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.அவர்களில் இராணுவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அடங்குகின்றனர்.

குறித்த 5 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் புதன்கிழமை(29) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டனர்.இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த 5 சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## "ஜனநாயகத்துக்கும் சட்டத்திற்கும் முரண்"

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தற்போது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விசேட சட்ட மூலம், அடிப்படையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு பெறப்படும் திகதி அறிவிக்கும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அவர்களுக்கு கீழ் இயங்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதத்துக்குள் உள்ள ஒரு திகதியாக வேண்டும்.

ஆகவே தேர்தல் ஆணைக்குழு சகல அரசியல் கட்சி செயலாளர்களை அழைத்து கலந்தாலோசித்த பிற்பாடு திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்துக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ சாதகமாக திகதியை தீர்மானிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாக நாங்கள் கருதுகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## "கனிய மணல் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்தி தேவையில்லை"

வருகை குறித்த குழுவினர் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம் பெறுகின்ற பகுதிகளுக்கு கள விஜயத்தை மேற்கொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுவில் புதன்கிழமை (29) காலை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர்,பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள்,பெண்கள் அமைப்பு,பொது அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் மன்னார் தீவு பகுதிகளுக்குச் சென்று மக்களிடம் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தினர்.

இதன் போது கலந்து கொண்ட பிரதிநிதிகள், மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிம மண் அகழ்வினால் மன்னார் தீவில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தினர்.

குறிப்பாக காற்றாலை மின் உற்பத்தியால் மீனவர்கள்,கர்ப்பிணி பெண்கள் உள்ளடங்களாக மன்னார் தீவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் மன்னாரில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வினால் மன்னார் தீவு அழியும் நிலை உள்ளமை குறித்தும் தெரிவு படுத்தப்பட்டது.

கனிய மணல் அகழ்வினால் ஒரு கட்டத்தில் கடல் நீர் கிராமங்களுக்குள் ஊடுருவும் நிலை உள்ளமை குறித்து அந்த குழுவினருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் மற்றும் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

குறிப்பாக மன்னார் தீவுப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இப்பகுதியில் தேவையில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் கடந்த 5 ஆண்டுகளாக குறித்த விடயம் குறித்து தம்முடன் இணைந்து கடமையாற்றி வருவதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் குறிப்பிட்டார்.

மக்களின் வாழ் விடங்களை பாதிக்காத வகையில் பெரு நிலப்பரப்புகளில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுக்க முடியும் .மேலும் கணிய மணல் அகழ்வை நாங்கள் முற்று முழுதாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கின்றோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரிட் மனு விசாரணையில் இருந்து நீதியரசர் விலகினார்

அந்த விசாரணை அமர்வில் இருந்து மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அமல் ரணராஜா விலகுவதற்கு செவ்வாய்க்கிழமை (28) முடிவு செய்தார்.

தொடர்புடைய ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய ஐந்து நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான மாயாதுன்னே கொரயா, பி. குமரன் ரத்னம், , சசி மகேந்திரன், தமித் தோட்டவத்த மற்றும் அமல் ரணராஜா ஆகிய ஐந்து நீதியசர்கள் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த முடிவு எடுக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தனக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்கின் விசாரணையை நிறுத்தி வைக்க இடைக்கால உத்தரவைக் கோரி இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மைத்திரியின் ரிட் மனு விசாரணைக்கு வருகிறது

மனுவை விசாரித்த அமர்வின் பல உறுப்பினர்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக பதவி உயர்வு பெற்றதன் காரணமாக, மனுவை விசாரிக்க புதிய அமர்வை நியமிக்க முடிவு செய்யப்பட்ட பின்னர் திகதி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான தம்மிக்க கணேபொல மற்றும் தமித் தோட்டவத்த ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே திகதி நிர்ணயிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் காயமடைந்த பாதிரியார் சிரில் காமினி மற்றும் ஜேசுராஜ் கணேசன் ஆகியோர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறைப்பாடுகளை செய்துள்ளதாகக் கூறும் மனுதாரர், சம்பவம் தொடர்பாக குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் ஜனாதிபதி தன்னை சந்தேக நபராகப் பெயரிடுமாறு கோரியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

> **ஒக்டோபர் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தனக்கு சம்மன் அனுப்பியுள்ளதாகவும் அதனை இரத்து செய்யுமாறு கோரியே முன்னாள் ஜனாதிபதி இந்த ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளார்**

இந்த முறைப்பாட்டை பரிசீலித்த முன்னாள் கோட்டை நீதவான், இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஒக்டோபர் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தனக்கு சம்மன் அனுப்பியுள்ளதாகவும் அதனை இரத்து செய்யுமாறு கோரியே முன்னாள் ஜனாதிபதி இந்த ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

## "மனப்பாங்கை மாற்றி கொள்ள வேண்டும்"

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (28) பிற்பகல் நடைபெற்ற 2025 பொருளாதார உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

" பொருளாதார நிலைமாற்றம்" என்ற தொனிப்பொருளில் இலங்கை வர்த்தக சபை இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது. அரசியல் ஸ்திரத்தன்மை, கடன் மறுசீரமைப்பு மற்றும் இறையாண்மை, கடன் தரநிலையை மேம்படுத்துதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தென்கிழக்கு ஆசியாவில் ஒரு மாற்றத்திற்கு இலங்கையை தயார்படுத்துவதே இந்த உச்சிமாநாட்டின் நோக்கமாகும். அத்தோடு இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டில் சகலவித பொருளாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்த ஆண்டு 4% க்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், அந்த இலக்கை வெற்றிகொள்வதற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாங்கள் இதற்கு முன்பு ஒருபோதும் அதிகாரத்தில் இருக்காத ஒரு அரசியல் இயக்கமாகும். கடந்த காலத்தில் வணிகக் குழுக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தில் சிலருக்கு எங்களைப் பற்றி ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தால், தற்போது அந்த சந்தேகத்தை நீக்கி, அரசாங்கத்தின்

எதிர்கால திட்டம் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால போக்கில் நம்பிக்கையை வளர்க்க முடிந்துள்ளது. இது கடந்த இரண்டு மாதங்களில் நாங்கள் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் 4% க்கும் அதிகமாக இருக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் இதுவொரு சவாலாக இருந்தாலும், அதை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய ஒரு சவாலாக நாங்கள் கருதுகிறோம். நாங்கள் பல துறைகளுக்கு முன்னுரிமை அளித்து பணியாற்றி வருகிறோம்.

குறிப்பாக, வரவிருக்கும் பட்ஜெட்டில் 1.35 டிரில்லியன் ரூபாயை அரசாங்க முதலீட்டு மூலதனச் செலவினங்களாகச் செலவிட எதிர்பார்க்கிறோம். இது சமீபத்திய காலங்களில் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு அரசாங்கம் செலவிட்ட மிகப்பெரிய தொகையாக இருக்கும்.

முந்தைய அரசாங்கங்களின் செயற்திறனின்மை காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவிடப்படவில்லை. சுமார் 75% - 80% மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால் இந்த ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாகச் செலவிட தேவையான வழிமுறையை நாங்கள் தயாரித்து வருகிறோம்.

அண்மையில் முதலீட்டுடன் தொடர்புள்ள அமைச்சுக்களின் மற்றும் அரச அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடல் நடத்தினோம். பொதுவாக எமது நாட்டிற்கு முதலீடுகளை பெற 82 நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும் என்பது தெரியவந்தது. அந்த அறிக்கையின்படி, இந்த நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெற இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் செல்லும்.

சுற்றுச்சூழலுக்கான அனுமதி பெறக்கூடிய 11 நிறுவனங்கள் உள்ளன. இதற்கு 269 நாட்கள் ஆகும். நடைமுறையில், இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் செல்கிறது. இதை 82 நாட்களாகக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஒரு முதலீட்டுத் திட்டத்திற்கு 8 நிறுவனங்களிடமிருந்து ஏனைய அனுமதிகளைப் பெற வேண்டும். நடைமுறையில், அதற்காக 184 வாரங்கள் கடந்துவிடுகிறது. இதை 102 நாட்களாகக் குறைக்க முடியும் என நாங்கள் கருதுகிறோம்.

ஒரு திட்டத்தை மதிப்பீடு செய்து முடிவெடுக்க முதலீட்டு சபைக்கு 80 நாட்கள் ஆகும். இதை இரண்டு வாரங்களாகக் குறைப்பதே எங்கள் எதிர்பார்ப்பாகும். பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக இருந்தால், அந்நிய நேரடி முதலீட்டிற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

சுற்றுலாத் துறையில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் நமக்கு உள்ளது. இந்த ஆண்டு 3 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்க்கப்படுகிறது.

சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்திற்கான எங்கள் உடன்பாட்டை நாங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளோம். நீண்ட காலமாக முடங்கிக் கிடக்கும் துறைமுகத்தில் விநியோக மையத்தை மிக விரைவில் தொடங்கவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். முதலீட்டுச் சபையில் பல திட்டங்கள் முடங்கியுள்ளன. அந்தத் திட்டங்களை விரைவாக முன்னோக்கிக் கொண்டு செல்லத் தேவையான அனுமதிகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்தியா மற்றும் சீனாவுடன் பல முக்கிய திட்டங்கள் குறித்து நாங்கள் விவாதித்து வருகிறோம். எனவே, நாட்டிற்கு கணிசமான அளவு வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க முடியும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் உள்ளோம்.

இலங்கையில் இதுவரையில் ஒருவரை நபரை இலக்காகக் கொண்டு உதவி வழங்கும் வேலைத்திட்டமே முன்னெடுக்கப்பட்டது. அதன்போது ஒருவரை இலக்கு வைத்து மாடு அல்லது கோழிகுஞ்சுகள் வழங்கப்பட்டன. அது வெற்றியளித்திருந்தால் தற்போது அதிகளவான பண்ணைகள் இருக்க வேண்டும். எனவே, தற்போதைய அரசாங்கம் சமூகத்தை வலுப்படுத்த புதிய பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

1991 அரச தோட்டங்கள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் முப்பத்திரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1700 ரூபாவை வழங்க முடியாமல் உள்ளது. அவ்வாறிருக்கையில் அந்த நிறுவனங்கள் வெற்றியளிக்குமா இல்லையா என்பதை சிந்திக்க வேண்டும். நேற்று சுங்கத்தில் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட கொள்கலன்கள் திறக்கப்பட்டன. அவற்றை கொண்டு வந்தவர்கள் யாரும் இல்லை. ஆனால், கொள்கலன்கள் திறந்து பார்த்தபோது, பிரபல நிறுவனத்தின் லேபிள்கள் ஒட்டப்பட்டிருந்தன. எனவே, மக்கள் தங்கள் மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டும். அரசியல் அதிகார தரப்பிற்குரிய

பண்புகளை நாம் கொண்டு வந்துள்ளோம். ஆனால், உங்களுக்குள் மாற்றம் ஏற்படாமல் ஒரு நாடென்ற வகையில் முன்னேற முடியாது.

போதைப்பொருள் விழிப்புணர்வுகள்

# “விளம்பரமாக மாறுகிறது”

■ ஏ.எல்.எம். ஷினாஸ்

போதைப்பொருள் விழிப்புணர்வுகள் மாணவர்களுக்கு விளம்பரமாக மாறுகிறது என தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் வட கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான உளவள ஆலோசனை துறை இணைப்பாளர் பஷீர் முஹம்மட் ரஸாட் தெரிவித்தார்.

பெரியநீலாவணை அக்பர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான போதைப்பொருள் பாவனை தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் (28) இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ராசிக் நபாயிஸின் ஒருங்கிணைப்பில் பாடசாலையின் அதிபர் எம்.சி. முஹம்மட் மபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாணவர்களுக்கு



போதைப்பொருள் பாவனை மற்றும் அதன் தடுப்பது தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை விழிப்புணர்வுகளை நீண்ட காலமாக நாம் செய்திருக்கிறோம். ஆனால் அதனுடைய பாவனை அதிகரித்துச் செல்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? என்பதை சிந்திக்க வேண்டும் என்றார்.

பெரும்பாலான விழிப்புணர்வு வேலை திட்டங்கள் மாணவர்களுக்கு விளம்பரமாக மாறுகிறது. புதிய புதிய போதை பொருட்கள் அதன் பாவனைகள் தொடர்பில் நாம் மாணவர்களுக்கு காட்சிப்படுத்தி அவர்களின் மனக்கண் முன்னே கொண்டு வந்து விழிப்புணர்வுகளை செய்யும் போது மாணவர்கள் அந்த பொருட்களை தேடி நுகர ஆரம்பிக்கிறார்கள். எனவே மாணவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பில் தெளிவூட்டுவதற்கு அல்லது விளக்கமளிப்பதற்கு முறையான தொழில்நுட்ப ரீதியான பயிற்றப்பட்ட பயிற்சியாளர்களை கொண்டு விழிப்புணர்வுகள் வழங்கப்பட வேண்டும். இதனை தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபை முன்னெடுத்து வருகின்றது. அந்த அடிப்படையில் நாம் ஒரு புதிய மாற்று உபாயத்தை கையாண்டு விழிப்புணர்வு செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்றார்.

## அமரர் அந்தனி ஜீவாவின் நினைவுப்பகிர்வு



எழுத்தாளர் அமரர் அந்தனி ஜீவா அவர்களின் நினைவுப்பகிர்வு, கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (31) பி.ப.05.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில், நினைவுப் பகிர்வுரையை பேராசிரியர் சி.மௌனகுரு, .தம்பு சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், மல்லியப்புசந்தி திலகர், சதீஸ் செல்வராஜ், கே.பொன்னுதுரை ஆகியோர் ஆற்ற உள்ளனர். என கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி ஜெ.தற்பரன் தெரிவித்தார்.

## ஹபரணை விபத்தில் 16 பேர் காயம்

ஹபரணை - மின்னேரிய வீதியின் 07வது மைல்கல் பகுதியில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், 16 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் பேருந்தும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துமே புதன்கிழமை (29) பிற்பகல் 11 மணியளவில் விபத்தில் சிக்கியுள்ளன.

இந்த விபத்தில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் பயணித்த 12 பேரும்,





தனியார் பேருந்தில் பயணித்த 4 பேரும் காயமடைந்து பொலன்னறுவை பொது மருத்துவமனையிலும், ஹபரணை பிரேதச மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பஸ், சிறிபுர பகுதியில் மரண வீடொன்றுக்கு கட்டுநாயக்கவிலிருந்து சென்று கொண்டிருந்ததாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## பஸ்ஸை தாக்கியது காட்டு யானை



■ எச்.எம்.எம்.பர்ஸான்

திருகோணமலையில் இருந்து கல்முனை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் வண்டி ஒன்றின் மீது யானை தாக்கிய சம்பவம் கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகம் அமைந்துள்ள கொழும்பு பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை (28) இரவு இடம்பெற்றுள்ளது.


தாக்குதலில் பஸ் வண்டியின் முன் பகுதி சேதமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சில நாட்களாக மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் மூன்று யானைகள் உட்புகுந்து அட்டாகசம் புரிந்து வருவதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் தினந்தோறும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு பகுதிக்குள் உட்புகுந்துள்ள யானைகளை காட்டுப் பகுதிக்குள் விரட்டும் முயற்சிகளை கல்குடா அனர்த்த அவசர சேவைகள் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு கடத்திவரப்பட்ட கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (28) அன்றுயா ழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.



இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து ஒரு மில்லியன் ரூபாய் பெருமதியுடைய 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரமல் சிறிவர்தன இராஜினாமா

இலங்கை போக்குவரத்து சபையின் (SLTB) தலைவர் ரமல் சிறிவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து தலைவர் பதவியை ராஜினாமா செய்த இரண்டாவது நபர் ரமல் சிறிவர்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் கண்டி மன்னனின் நினைவு நாள் விழா

இலங்கையின் கடைசி தமிழ் மன்னன் ஸ்ரீவிக்ரம ராஜசிங்கனின் 193வது நினைவு நாள் விழா ஜனவரி-30 ஆம் திகதி தமிழ்நாட்டில் கண்டி மன்னர் கல்லறை அமைந்திருக்கும் நினைவிடமான வேலூர், முத்து மண்டபத்தில் நடைபெறுகிறது.

வேலூர் புதிய பேரூந்து நிலையத்துக்கு அருகில் அமைந்திருக்கும் முத்து மண்டபத்தில் இந்த நிகழ்வு மாலை 4 மணிக்கு மன்னரின் வாரிசுகளின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

ஆண்டுதோறும் மன்னரின் வாரிசுகளால் மன்னர் மறைந்த நினைவு நாளில் அவரின் கல்லறையில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படும்.

ஸ்ரீ விக்ரமராஜசிங்கனின் 8வது வாரிசான ஸ்ரீ விக்ரம அசோக்ராஜாவின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் வாழும் மன்னரின் குடும்பங்களைச் சேர்ந்த மன்னரின் வாரிசுதாரர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.



வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

கொழும்பு 04 டிக்மென் வீதியில், புதிய அடுக்குமாடி குடியிருப்பில் 3 படுக்கையறைகள் 3 குளியலறைகள் மற்றும் 4 படுக்கையறைகள் 4 குளியலறைகள் உடனடி குடியிருப்புக்குக் கிடைக்கின்றன. மிகவும் வசதிகளுடன் கூடிய புத்தம் புதிய அடுக்குமாடி குடியிருப்பில் மையப்படுத்தப்பட்ட இடம், தளபாடங்கள் அல்லது தளபாடங்கள் இல்லாத நிலையில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும். வெளிநாட்டினருக்கு முன்னுரிமை. 0777 699207, 0777563950

வாடகைக்கு

தளபாடங்கள் இல்லாத இரண்டாவது மாடி , புதிதாக டைல்ஸ் பதிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட இரண்டு படுக்கையறைகள், இரண்டு குளியலறைகள், விறாந்தை, பேண்ட்ரி சமையலறை மற்றும் கராஜ் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு, மாதம் 80,000 ரூபாய்க்கு கொழும்பு -8 மங்கள வீதி, மெனிங் டவுன் வீட்டு வசதித் திட்டத்தில் உடனடி வாடகைக்கு உள்ளது. (இராணுவ மருத்துவமனைக்கு முன்பாக) பொரளை மற்றும் நாரஹேன்பிட்ட சந்திக்கு 2 கி.மீ. தூரம். தொடர்புகொள்ள - பஜீ 0705675564, 00447799967729 (வட்ஸ் ஆப்) 0775897125 (வட்ஸ் ஆப்) bajiwod@gmail.com

## மட்டக்களப்பில் வெளிநாட்டு பறவைகள்



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு -கல்முனை பிரதான வீதியோரத்தில் குருக்கள்மடம் ஏத்தாலைக்குத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டு பறவைகளை சஞ்சரிப்பதை அவதானிக்க முடிகிறது.

அவற்றில் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாட்டு பறவைகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பறவை இனம் வருடத்தில் டிசம்பர் ஜனவரி, மாதங்களில் இசை சரணாலயத்திற்கு இனப்பெருக்கத்திற்காக வருவதாகவும் ஏப்ரல் மே மாதங்களில் தன் குஞ்சுகளுடன் மீண்டும் உரிய நாடுகளுக்குத் திரும்பிச் செல்வதாகவும் சூழலியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

குறித்த பறவைகள் தற்போது இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு அடைகாத்து குஞ்சுகளை பொரித்துள்ளது.குறித்து குஞ்சுகளுக்கு உணவு ஊட்டும் காட்சிகள் காணமுடிகின்றது. அதன் திசைகளும் பலரையும் கவர்ந்து உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அழகு தரும் குருக்கள்மடம் ஏத்தாலை குளம் பறவைகள் சரணாலயத்தை பாதுகாப்பாக பேணுவதற்கு சம்மந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





## புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு

மாத்தளை கல்வி வலய ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தில் தரம் ஆறுக்கான புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருச்செல்வம் அவர்கள் தலைமையில் புதன்கிழமை (29) அன்று இடம்பெற்ற போது.











# இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினையை தீர்ப்பது அவசியம்

நாட்டின் கடல் பகுதியில் இந்திய மீனவர்களின் 'அத்துமீறல்' அற்பமானது அல்ல. இந்திய மீனவர்கள் நாட்டின் வடக்கு கடல் மண்டலத்தில் அத்துமீறி நுழைவது அல்லது 'வேலி தாண்டுதல்' மிகவும் பொதுவானதாகிவிட்டது. 'வேலியைத் தாண்டும்' இந்திய மீனவர் இப்போது 'வீடுகளுக்குள் தாண்டும்' அளவுக்கு தனது ஆக்கிரமிப்பு எல்லையை விரிவுபடுத்திவிட்டார் போலிருக்கிறது. இந்திய மீன்பிடி படகுகள் கல்பிட்டி கடல் பகுதிக்கு அடிக்கடி வரத் தொடங்கியுள்ளதாக வெளியான தகவல்களிலிருந்து இது தெளிவாகிறது. இந்தியா-இலங்கை மீன்பிடிப் பிரச்சினைக்கு நூற்றாண்டு பழமையான வரலாறு உண்டு, ஆனால் இப்போது அதற்கு இன்னொரு நூற்றாண்டு பழமையான எதிர்காலம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்த பிரச்சனைக்கு முக்கிய காரணம் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அமைவிடமாகும். உலக வரைபடத்தில் காது கேட்கும் அளவுக்கு இலங்கையில் மன்னாரும், இந்தியாவில் ராமேஸ்வரமும் அருகாமையில் உள்ளன. இலங்கையின் பிரதான நிலப்பகுதியிலிருந்து வெகு தொலைவில் உள்ள தீவான கச்சத்தீவிலிருந்து, ராமேஸ்வரத்தில் உள்ள தொலைபேசி கோபுரங்கள் போன்ற உயரமான கட்டமைப்புகளை வெற்று கண்ணால் காணலாம்.

இலங்கை கடலிலிருந்து ஒரு குறுகிய நிலப்பகுதியால் பிரிக்கப்பட்டிருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த 'ஜலசந்தி' மிகவும் குறுகியது. இந்தக் குறுகிய கடலில் மீன்களைத் தேடி எல்லைகளைக் கடக்கும் ஏராளமான இந்தியப் படகுகளால் இந்தப் பிரச்சினை எழுகிறது.

இந்தியாவிலேயே அதிக மீன்பிடி மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இலங்கை நாடு முழுவதும் கிட்டத்தட்ட மூன்று லட்சம் மீனவர்கள் உள்ளனர். அதன்படி, நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் கடலுக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு மீன்பிடிப் படகிற்கும், தமிழ்நாட்டிலிருந்து மட்டும் சுமார் மூன்று மீன்பிடிப் படகுகள் கடலுக்கு அனுப்பப்படுகின்றன.

மூன்று தசாப்தங்களாக மீன்பிடிக்காததால் இலங்கையின் கடற்கரை மீன் வளங்களால் நிறைந்துள்ளது என்பது இந்த வேலியைத் தாண்டுவதற்கான ஊக்கத்தை அளிக்கிறது. இந்திய நீர்நிலைகளில் மீன் வளங்கள் குறைந்து வருவது மற்றொரு பங்களிக்கும் காரணியாகும். இந்தக் குறைவுக்குக் காரணம், தென்னிந்திய மீனவர்கள் கடலில் 'ஸ்கூப்பிங்' செய்து மீன்பிடிக்கப் பழகிவிட்டதே ஆகும்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மற்றும் தங்கள் கப்பல்களில் 'பாட்டம் டிராலர்' முறையைப் பயன்படுத்தி கடலில் மீன் அறுவடையை சுரண்டுவது மட்டுமல்லாமல், கடலின் அடிப்பகுதியில் மீன்களுக்கு நாற்றங்கால்களாக செயல்படும் தாவர அமைப்புகளை அகற்றுவதன் மூலம் ஒரு பெரிய உயிரியல் இனப்படுகொலையையும் செய்கிறார்கள்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவதால் ஏற்படும் தீங்கு, அவர்கள் மீன் கூட்டத்தைப் பிடிப்பதால் அல்ல, மாறாக அவர்களின் அழிவுகரமான மீன்பிடி முறைகள், கடல் அடிவாரத்தை "தேடிச் செல்லும்" காரணமாக, மீன் இனப்பெருக்கத்திற்கு மிகவும் உகந்த இந்த ஆழமற்ற கடல், விரைவில் மீன்கள் இல்லாத வெறும் உப்பு நீர் படுகை. மற்றொரு பிரச்சனை, இலங்கை மீன்பிடி படகுகளை விட பெரிய படகுகளில் இலங்கையின் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவுவதால் ஏற்படும் 'கடல் பயங்கரவாதம்' ஆகும். இந்தப் 'படகுத் தாக்குதல்கள்' இலங்கை மீன்பிடிக் கப்பல்களுக்கு ஆபத்தை விளைவிக்கும்


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# விசித்திரமான உள்வீட்டு பிரச்சினைகள்

**முருகானந்தம் தவம்**

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான உள்வீட்டு சண்டைகள் ,சூழ்ச்சிகள்,குழி பறிப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள் நீதிமன்றம் சென்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதி கோரப்பட்டு வழக்கு விசாரணைகள் நடந்துவரும் நிலையில் தற்போது அதே பிரச்சினைகள் நாட்டின் உயர் பீடமான பாராளுமன்றத்திலும் முன் வைக்கப்பட்டு நீதியும் விசாரணையும் கோரப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சியில் சிறீதரன் -சுமந்திரன் என இரு அணிகளிடையில் தலைமைப் பதவிக்கு இடம்பெற்று வந்த பனிப்போரே தலைமைப் பதவிக்கான தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்று சுமந்திரன் தோல்வியடைந்த நிலையில் நேரடி யுத்தமாக மாறி இன்று நீதி,விசாரணை கோரி நீதிமன்றம்,பாராளுமன்றம் வரை சென்றுள்ளது

தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கு நடந்த செயற்குழு தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்ற நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையில், சுமந்திரன் அணியினர் ''தலைவர் பதவிக்கான தேர்தலில் முறைகேடுகள் உள்ளன''என்று கூறி பிரச்சினையை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று தலைவர் பதவி நியமனத்திற்கு இடைக்கால தடை பெற்று கட்சியை முடக்கி வைத்துள்ளனர்.

அத்துடன் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் மூலம் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மாவை சேனாதிராஜா வலுக்கட்டாயமாக நீக்கப்பட்டு பதில் தலைவராக சி.வி.கே. சிவஞானத்தையும் செயலாளராக சத்திய லிங்கத்தையும் கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளராக தன்னையும் நியமித்ததுடன் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம்,விசேட குழுக்களை நியமிக்கும் ,தீர்மானங்களை எடுக்கும்,அறிவிக்கும் அதிகாரங்கள் என அனைத்தையும் சுமந்திரன் தன் வசம் எடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுக்களை 2023ஆம் ஆண்டு சமர்ப்பித்த தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள், கட்சிக்கு எதிராக செயற்பட்டிருப்பின், அவர்களின் பெயர்கள் நீக்கப்படும், இனப்பிரச்சினைக்கு முக்கியமான அரசியல் தீர்வாக இலங்கை தமிழரசுக் கட்சி சமஷ்டி முறையிலான ஆட்சியையே வலியுறுத்துகின்றது,இனியும் வலியுறுத்தும், இதற்காக தற்போது 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது . இந்தக் குழு இந்த விடயங்களுக்கு பொறுப்பாக இருந்து செயல்படும். மேலும் கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த தீர்மானங்கள் மூலம் சுமந்திரன் தமிழரசுக்கட்சியில் தனது ஆதிக்கத்தை பல படுத்தியுள்ளார். ஏனெனில் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர்களில் சிறீதரன் தரப்பினருக்கு ஆப்பு வைக்கப்படும். அத்துடன் சமஷ்டியே தமிழரசுக் கட்சியின் இறுதி தீர்மானம் எனத்தெரிவித்துள்ளதன் மூலம் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடனான பேச்சுகளுக்கும் ஒன்றிணைவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள 7 பேர் கொண்ட குழுவில் தலைவர் சி.வி. கே சிவஞானம்,சுமந்திரன், சத்தியலிங்கம் இரா.சாணக்கியன், துரைராஜசிங்கம் .சயந்தன்,சிறீதரன் நியமிக்கப்பட்டுள்ளனர் .இதில் சிறீதரனைத் தவிர ஏனையவர்கள் சுமந்திரன் அணியினர்.

ஆகவே சிறீதரனின் ஒன்றிணைவதற்கான ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடனான பேச்சுக்கள் இனி இடம் பெற வாய்ப்பில்லை. கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதன் மூலம் சிறீதரன் அணியினர் எவ்வேளையிலும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்படலாம் அல்லது வெளியேற்றப்படலாம் .அல்லது தேர்தல்களில் போட்டியிட வேட்புமனுவுக்கு அனுமதி மறுக்கப்படலாம்.

அதுமட்டுமன்றி சிறீதரனின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் இன்னும் பல நகர்வுகளை சுமந்திரன் அணி முன்னெடுத்த போதும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை.அதாவது தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழு சர்வதேச தூதுவர்களுடன் சந்திப்புக்களை நடத்தும் போது சுமந்திரனையும் அழைத்து செல்ல வேண்டும். அரசியலமைப்பு உருவாக்க விவகாரங்கள், அரசியல் சார் உயர் கூட்டங்களில் கட்சியின் பதில் தலைவர் என்ற வகையில் சிவஞானமும், சுமந்திரனும் அழைத்துச் செல்லப்பட வேண்டும், அரசியலமைப்பு பேரவை விடயங்களில் சுமந்திரனின் ஆலோசனையை பெற வேண்டும் என்ற சுமந்திரனை முன்னிலைப்படுத்தி அவரின் விசுவாசிகளால் கொண்டுவரப்பட்ட முன்மொழிவுகள் சிறீதரன் அணியினரின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டதாகவும் தகவல்கள் உள்ளன.

இவ்வாறான நிலையில் தான் ''நான் மேற்கொண்ட இந்திய பயணத்தை தடுக்க பெரும் சதி மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பில் சுமந்திரனையும் விசாரிக்க வேண்டும்'' என சிறீதரன் எம்.பி. பாராளுமன்றத்தில் கொண்டு வந்த சிறப்புரிமை பிரச்சினை சிறீதரன் -சுமந்திரன் உள் ''வீட்டு'' சண்டையை நேரடி யுத்தமாக மாற்றியுள்ளது உள்வீட்டு சண்டையை சுமந்திரன் அணி நீதிமன்றம் கொண்டு சென்ற நிலையில் அதனை ஒரு படி தாண்டி சிறீதரன் பாராளுமன்றம் வரை கொண்டுவந்துள்ளார் .

இந்தியாவிற்கு நான் பயணம் மேற்கொண்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணத்தடை உள்ளதாக தெரிவித்து விமான நிலைய அதிகாரிகளினால் தடுக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு நீதி வழங்கப்பட வேண்டும் ,அத்துடன் அவ்வாறு தடுக்கப்பட்டமைக்கான காரணம் என சில விடயங்களைக் கூறியுள்ள முன்னாள் எம்.பி. சுமந்திரனிடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் வலியுறுத்திய சிறீதரன் இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் பெரும் சதி இருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தனியார் ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த முன்னாள் எம்.பி. சுமந்திரன்''சிறீதரன் தடை செய்யப்பட்ட கனடாவிலிருந்து வருகின்ற அமைப்போடு பேச முனைந்தாகவும் அதற்காகத்தான் அவர் சென்னை செல்ல இருந்ததாகவும் அந்த காரணத்தின் அடிப்படையில் தான் அவரை தடுக்க விமான நிலையத்தில் முயற்சி செய்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் சிறீதரனை அவர்கள் மறித்திருக்கலாம். ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை வைத்துதான் நான் இதனைக் கூறுகிறேன்'' என்று அதில் கூறியிருந்தார்.

எனவே இது தொடர்பில் நீங்கள் சுமந்திரனிடம் விசாரித்தால் எந்த எந்த ஊடகங்களில் இந்த செய்தி வந்துள்ளது என்பதை அறிந்து அந்த ஊடகங்களின் பிரதானிகளை விசாரிப்பதன் மூலம் உண்மையைக் கண்டறிய முடியும். இது எனக்கு எதிராக செய்யப்பட்ட மிகப்பெரும் சதியாகவே நான் கருதுகின்றேன்.விமான நிலையத்தில் தடுக்கப்பட்டமை தொடர்பில் சிறீதரன் தனக்கு தெரிவிக்கவில்லை என்றும் சுமந்திரன் அதில் கூறியுள்ளார். நான் அவரை சென்னையில் சந்தித்தபோது சுமந்திரனும் இது தொடர்பில் என்னிடம் எதுவும் கேட்கவும் இல்லை.


நான் எந்த ஒரு காலத்திலும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள கனடாவிலுள்ள அமைப்புடன் பேசுவதற்கு தயாராகவில்லை. அப்படி யாரும் என்னைக் கேட்டதுமில்லை. அவ்வாறான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவும் இல்லை. அரசின் பேச்சாளர் போல் அல்லது புலனாய்வுத்துறையின் பேச்சாளர் போல் ஊகத்தின் அடிப்படையில் ஊடகங்களில் வந்தது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளது மிகப் பாரதூரமானது எனவும் தனது சிறப்புரிமை மீறல் பிரச்சினையில் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்தில் சிறீதரன் தடுக்கப்பட்டமைக்கும் அரசுக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை. எனவே சிறீதரனின் இக்குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு சிறீதரனுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என அரசு உடனடியாக பதிலளித்தது. அதேவேளை சிறீதரனின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் சுமந்திரன் இதுவரையில் எவ்வித மறுப்புக்களையோ விளக்கங்களையோ,பிரதிபலிப்புக்களை யோ வெளிப்படுத்தவில்லை. ஆனால் இந்த மௌனம் சிறீதரனுக்கு நல்லதற்கல்ல என்பது மட்டும் வெளிப்படை.

இவ்வாறான நிலையில் தான் முன்னாள் எம்.பி.யான சுமந்திரனுக்கு அநுர அரசால் இரண்டு மெய் பாதுகாவலர்கள் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.அநுர அரசாங்கம் ஆட்சி அமைத்த பின்னர் செலவினங்களை குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள்,எம். பி.க்களுக்கான பாதுகாப்பை குறைத்தும் நீக்கியும் வரும் நிலையில் முன்னாள் எம். பி.யான சுமந்திரனுக்கு மட்டும் எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது .

இந்தியாவுக்கு பயணமான சிறீதரனை தனது அரசியல் செல்வாக்கை, அரசுடனான தொடர்பை பயன்படுத்தி சுமந்திரன் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்த முயன்றிருக்கலாம் என்ற சந்தேகங்கள் வெளிப்படுத்தப்பட்டு வரும் நிலையில் அநுர அரசுடனான சுமந்திரனின் நெருங்கிய உறவை வெளிப்படுத்தும் விதமாக இந்த மெய்பாதுகாவலர்கள் விடயம் அமைந்துள்ளதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எது எப்படியோ, இலங்கை நீதிமன்றங்களிலோ பாராளுமன்றத்திலோ தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது எனக்கூறி வந்த தமிழரசுக் கட்சியினர் இன்று தமது உள்வீட்டு பிரச்சினைகள், மோதல்களுக்கு விசாரணையும் நீதியும் கோரி நீதிமன்றத்தையும் பாராளுமன்றத்தையும் நாடியுள்ளமை விசித்திரமானது.



## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்க! ஒருவரை முழு மனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழு மனிதனாகி விட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களை விட மேலானது.

சில விஷயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. அவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பு காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கால்நடை வளர்ப்பில் பாதிப்பு

மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பிரதேசத்தில் உள்ள பண்ணையாளர்கள் தமது கால்நடை வளர்ப்பில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் .

மன்னார் மடு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிராம மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை அடிப்படையாக கொண்டு தங்களின் வாழ்வாதாரங்களை பூர்த்தி செய்து வருகின்றனர்.

இதில் கால்நடை வளர்ப்பால் அக் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் . கால்நடைகளை கொண்டு மேய்ப்பதற்கு மேச்சல் காணிகள் இன்றி. குளங்களிலும் காடுகளிலும் ,கால்நடைகளை மேய்ப்பதால் முதலைகளும் புலிகளும் , கால்நடைகளை பிடிக்கிறது. இதனால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது . மேய்ச்சல் காணிகள் இல்லாமையால் தான் இந்த பிரச்சனைகள் என கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கு கால்நடைகளை பாதுகாப்பாக மேய்ப்பதற்கு உரிய காணிகளை ஒதுக்கி தருமாறு. பிரதேச அபிவிருத்தி குழு கூட்டங்களில் கதைத்தும் உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் மக்கள் கவலை அடைகின்றனர். தங்களுக்கான தீர்வினை பெற்று தருமாறு பெரியபண்டிவிரிச்சான் கால்நடை பண்ணையாளர்கள் கேட்டு நிற்கின்றனர்.

யது பாஸ்கரன்

# ‘முல்லைக் கோணேஸ் சிறுகதைகள்’ நூல் வெளியீடு










முல்லைக் கோணேஸின் சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மத்திய கல்லூரி பொன் விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.\

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறுகதை நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

அந்த வகையில் முல்லைக் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பீதாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வானது மங்கல விளக்கேற்றப்பட்டது, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து நூல் வெளியிடப்பட்டதுடன், அதனையடுத்து நூல் வெளியீட்டுரை, நூல் நயப்புரைகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, நில அளவையாளர் க.அழகேந்திரம், பாடசாலை அதிபர்களான நெவிற் ஜீவராசா, எம்.ஜெபநேசன், சி.அமிர்த நாதன், எழுத்தாளர் வினோஷா வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

விஜயரத்தினம் சரவணன்









# யார் எவர் நூல் வெளியீடு








லிட்டில் டெக் அகாடமியின் முன்னாள் பணிப்பாளரும் சமூக ஆளுமையுமான அமரர் வ.சிவஜோதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு லிட்டில் டெக் அகாடமியின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறும் ஞாபகார்த்த நிகழ்வு கிளிநொச்சி திருநகர் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் அண்மையில் இடம்பெற்றது.






நிகழ்வுகளின் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்ட ஆளுமைகளை ஆவணப்படுத்திய “யார் எவர் கிளிநொச்சி தொகுதி 2 ” என்ற நூலும் வெளியீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நூலை சிவஜோதியின் தந்தை சி.வைத்தீஸ்வரன் வெளியீடு வைத்தார். நூலுக்கான வெளியீட்டுரையை ஆசிரியர் கைலாயநாதன் துஷ்யந்தன் வழங்கி வைத்தார்.

2024 ஆம் ஆண்டு விருதுக்குரிய மையப்பொருளாக தேசிய நல்லிணக்கம் தேர்வு செய்யப்பட்டது. இந்த அடிப்படையில் 2024 கான சிவஜோதி ஞாபகார்த்த விருதும், ரூபாய் ஒரு லட்சம் பணப்பரிசு மாத்தளை சுனேத்த தேரர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வானது ஊடகவியலாளரும் லிட்டில் டெக் அகாடமியின் ஆலோசனைக் குழு உறுப்பினருமான மு.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்க, சிறப்பு விருந்தினர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராஜா, சமத்துவக் கட்சி பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். காவேரி கலாமன்ற இயக்குனர் வண.பிதா ஜோசுவா சிவஜோதி ஆசியுரையையும் ஞாபகார்த்த நினைவுப்பேருரையை சிரேஷ்ட சட்டத்தரணியுமான மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதியுமான சோ. தேவராஜாவும் வழங்கினார்.

நிகழ்வுகளின் இறுதியில் லிட்டில் டெக் அகாடமியின் உதவிப் பணிப்பாளர் பாலசிங்கம் கஜீபன் ஏற்புரையை வழங்க, திருமதி கம்சகௌரி நன்றியுரை வழங்கினார்.

மு.தமிழ்ச்செல்வன்

# மூக்குத்தி



இரா. சிவலிங்கம்

மாலை நான்கு மணியிருக்கும் மழை இலேசாகத் தூரிக் கொண்டிருந்தது. தோட்டத்து ஆத்து கிரவுண்டில் எல்லா சிறுவர்களும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். எல்லா துன்பங்களையும், பிரச்சினைகளையும், வேதனைகளையும் மறந்து புட்போல் விளையாடும் இவர்களுக்கு பொழுதுபோக்கே இதுதான். வீட்டில் எது இருக்கின்றதோ இல்லையோ ஆனால் விளையாட்டு மட்டும் தினமும் இருக்கும்.

விளையாட்டு மிக உற்சாகமாக சென்றுகொண்டிருந்தது. அப்போது ஆற்றங்கரையில இருந்து ஒரு குரல் ஒழித்தது. ஏய் தம்பி இங்க வாடா, ஏய் ஒன்னத்தான்டா இங்க வா இது அங்கு விளையாடிக்கொண்டிருக்கும் மனோவின் தாய் மகனைக் கூப்பிடுகின்றாள். விளையாட்டு ஆர்வத்தில் மனோவிற்கு காதில் அது விளங்கவில்லை. மனோவின் தாய் தோட்டத்து வேலையை முடித்துவிட்டு வந்து மனோவை ஏதோ அவசரமாக கூப்பிடுகின்றாள்.

ஏம்மா? வெளையாடிக்கிட்டுத்தானே இருக்கேன். ஏம்மா? கொஞ்சம் நேரம் வெளையாடிட்டு வரேம்மா? ஏய் நீ வரப்போறியா இல்லையா? தாயின் அதட்டலைக் கேட்டு மனமில்லாமல் ஏதோ முனுமுனுத்துக் கொண்டே ஓடி வருகின்றான். என்னம்மா சொல்லு நா வெளையாடப் போகனும். வீட்டுக்கு வா சொல்றேன். தாயும் மகனும் நடக்கின்றனர்.

ஏய் தம்பி நீ போய் அம்மாயிகிட்ட (மனோவின் அம்மாவின் அம்மா) சல்லி இருந்தா வாங்கிட்டு வா? வீட்டில ஒன்னுமே இல்ல. நீ என்னம்மா எந்தநாளும் இப்படித்தான் சொல்ற. போடா தம்பி இப்ப போனாத்தான் ஆறரை மணிக்கு சரி வரமுடியும். மனோத்தின் வீட்டிலிருந்து கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடத் தூரம். மனோ தண்ணியை மோந்து மடக் மடக்கனு குடித்துவிட்டு அம்மாயி இருக்கும் கல்லுமலை தோட்டத்தை நோக்கி ஓடுகின்றான்.

மனோ ஐந்தாம் வகுப்பு படிக்கின்றான். மெலிந்த உடம்பு, கை, கால், எல்லாம் சூம்பி போய் மிகச் சிறியவனாக காட்சியளிக்கின்றான். முகத்தில் மட்டும் ஒரு தெய்வீக கலை. வறுமையிலும் முகம் செழிப்பாக இருக்கும். வறுமையின் கோரப்பிடியில் வாழும் மனோவிற்கு ஒரு தங்கை, தகப்பனும், தாயும் தோட்டத்தில் வேலை. ஆனால் அவர்கள் இருவரினதும் வருமானத்தில் மட்டுமே வாழ்க்கை ஓடுகின்றது.

அவர்களின் வருமானத்தில் என்னத்தான் மிச்சம் பிடித்து வைத்தாலும் சில நாட்கள் பட்டினிதான். அம்மாயிகிட்ட சல்லி வாங்கச் சொல்லுவது இது முதல் தடைவையல்ல. இந்த மாதிரி பல முறைகள் ஓடியிருக்கின்றான். வீட்டில் நடக்கத் தொடங்கிய மனோ முனியாண்டி கோயில் வரை சென்று, முணியாண்டி சாமியை கண்டதும், சாமி கடவுளே, இன்னைக்கு எப்படியாவது, சல்லிக் கெடைக்கனுமுனு அந்த பிஞ்சு மனசு வேண்டிக்கொண்டு, அங்கிருந்த மண்ணை நெத்தியில் தொட்டு வைத்துக்கொண்டு, அந்த ஸ்டோர் ஏத்தத்தில் மூச்சு வாங்க அந்த சிறு கால்கள் நடக்கின்றன.

ஏத்தம் முடிந்ததும். மீண்டும் சிறு ஓய்வு, பிறகு நடை இவ்வாறு செல்லும் போது எதிரே கருப்பையா கோயில் அதனையும் வேண்டிக் கொண்டே ஓடுகின்றான். மெதுவாக வானம் இருளத் தொடங்கியது. குடையும் இல்லை. காலில் செருப்பும் இல்லை. அந்தக் கரடு முறடான ரோட்டில் ஓட்டமும், நடையுமாக வேர்க்க வேர்க்க எல்லா கடவுள்களையும் வேண்டிக்கொண்டுச் செல்கின்றான்.

அம்மாயி இருக்கும் தோட்டத்திற்கு கிட்டத்தில் வந்தபோது திடீரென மழைப் பெய்யத் தொடங்கியது. பக்கத்தில் இருந்த எண்ணெய் காம்பிராவில் சற்று ஒதுங்கி நிற்கின்றான். கடவுளே மழை விட்றனும் என வேண்டிக்கொண்டே நிற்கின்றான். மழை விட்டப்பாடில்லை. அந்த பிஞ்சு மனம் தன் அம்மா சொன்ன விடயத்தையே திரும்ப திரும்ப நினைக்கின்றது. வீட்டில் ஒன்னுமில்லடா, இப்ப போனாத்தான் ஆறரை மணிக்காவது வரமுடியும். மனம் ஒரு முடிவுக்கு வந்தவனாய் அந்த மழையைப் பொருட்படுத்தாமல் ஓடுகின்றான். வழியில் போகின்றவர்கள் மனத்தை பரிதாபமாக பார்ப்பது மனோவிற்குத் தெரிகின்றது.

நனைந்த உடையோடு அம்மாயின் வீட்டை அடைந்த மனத்தை, அவங்க அம்மாயி கட்டியணைத்து ஏன்டா இப்படி நனைந்து வார, காச்சக் கீச்ச வந்தா என்னடா செய்வது. அம்மாயி ஏசிக்கொண்டே தலையை தன் முந்தானையால் துடைத்து விடுகின்றாள். சாப்பிட்டியா? தேத்தண்ணிக் குடிச்சியா? எனக் கேட்டுக் கொண்டே அம்மாயி ஓடிப்போய் லயத்துக் கடையில் ஆட்டுக்கால் இரண்டை வாங்கி வந்து, இந்தா, இத தின்னு நா தேத்தண்ணி ஊத்தித் தாரேன். மனோ ஆட்டுக்காலை வாயில் போட்டு மென்று கொண்டே, அம்மாயி அம்மா வீட்டுல ஒன்னுமே இல்லையென்று சொல்ல சொல்லி சல்லியிருந்தா எவ்வளவு சரி வாங்கிட்டு வரச்சொன்னீச்சு.

நா எங்கடா போவேன். நா என்னா தோட்டத்துல, வேலையா செய்றேன். அந்த டீமேக்கர் அம்மா வீட்டுல வேல செஞ்சா, ஏதாவது கொடுப்பாங்க. ஏன்டா ஒங்க அம்மாவுக்கு சம்பளம் இல்லையா? பகல் என்னா சாப்பீட்டிங்க? பகல் ஒரு இறாத்தல் பானை நாலு பேரும் சாப்பிட்டோம். இப்படி எத்தன நாளைக்கு இருக்கப் போறிங்கனு எனக்குத் தெரியல.

அம்மாயி தன்னுடைய சுறுக்குப் பையில் இருந்த நூறு ரூபாவை கொடுத்து விட்டு, இந்தா இந்த மூக்குத்தியைத் தாறேன் கொண்டு போய் வச்சு ஏதாவது சாமான் வாங்கச் சொல்லு. தேத்தண்ணியைக் குடித்த மனோவிற்கு வாழ்க்கையில் எதையோ சாதித்து விட்டது போல் தோன்றியது. கிடைத்தக் காசையும், மூக்குத்தியையும் சேப்பில் வைத்துக்கொண்டு அம்மாயி நா போயிட்டு வாறேன். கவனமா போய்யா. நா வந்து விட்டுட்டு வரவடா? வேனா அம்மாயி நனையாம இந்தா இந்த கொடய கொண்டு போ.

அம்மாயின் பாசம் அவனை என்னமோ செய்தது. அந்த முடியாத வயதிலும் அம்மாயி உதவுகிறாள். அம்மாயின் தலை மறைந்ததும் மனோ ஓடுகின்றான். மனோ ஓடி வருவதைப் பார்த்த தாய் ஒரு பெருமூச்சுடி விடுகின்றாள். மனோ கையிலிருந்த காசையும், மூக்குத்தியையும் வாங்கிக் கொண்டு தன் பிள்ளையைப் பார்க்கின்றாள். அதில் ஒரு சோகம் தெரிகின்றது. கால் வலிக்குதாடா? தாயின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வென கொட்டியது. மனோ தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

என்னடா செய்றது நாம வாங்கி வந்த வரம். நீ ஏம்மா அழற மகன் ஆறுதல் சொல்கிறான். தாயும், மகனும் மூக்குத்தியை எடுத்துக் கொண்டு ஈட்டுக் கடைக்குச் செல்கின்றார்கள். ஈட்டுக் கடையில் ஐந்தாறு பேர் நிற்கின்றார்கள். வாம்மா என்ன விடயம் ஈடுவைக்கவா? ஆமாங்க முதலாளி வீட்டுல ஒரு சாமானும் இல்ல அதுக்கு நா என்னம்மா செய்றது. ஏதாவது தங்கச் சாமான் இருந்தா கொண்டு வா காசு தாறேன்.

தன் கையில் பேப்பரில் சுற்றி வைத்திருந்த மூக்குத்தியைக் கொடுக்க என்னம்மா இப்ப மூக்குத்தியெல்லாம் வாங்கிறது இல்லையே. இத போய் கொண்டு வந்திருக்க இது ஒன்னுதாங்க இருந்திச்சு. ஏம்மா இங்க வந்து ஏ உயிர வாங்குறிங்க. என்னய்h செய்றது. இருக்கததானே கொண்டு வர முடியும்.

மனோ தாயின் முகத்தை பாவமாகப் பார்க்கின்றான். அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிகின்றது. அதனைத் துடைத்துக் கொண்டு அருகில் இருந்த கடையில் அரிசி, மாவு, சீனி,தேங்காய், மரக்கறி, லாம்பெண்ணை, அப்பாவுக்கு வெத்தல பாக்கு வாங்கிக் கொண்டு கையில் இருந்த காசைக் கொடுக்கின்றாள். என்னம்மா மிச்சக் காசுக்கு என்னா செய்றது. சம்பளம் போட்டு மிச்சத்த தாறேங்க.

அதெல்லாம் பொய் இப்ப இங்க இப்படித்தான் சொல்லி வாங்கிட்டுப் போவிங்க அப்புறம் சம்பளம் போட்டதும் கடை பக்கமே வர மாட்டீங்க. எல்லோரிடமும் பேச்சு வாங்கும் அம்மாவைப் பார்த்து மனோவிற்கு அழுகையே வந்து விட்டது. தாய் படும் துன்பத்தை அந்த பிங்சு இதயம் தாங்க மறுக்கின்றது. வீடடுக்கு வரும் போது இரவு எட்டு மணி. வீடு முழுவதும் இருட்டாக இருந்தது. அப்பா அமைதியாகப் படுத்து இருந்தார். அப்பா வேலைக்கு போவது மட்டும்மதான். வீட்டுப் பொறுப்பெல்லாம் அம்மாதான். அவசர அவசரமாக மனோ லாம்பை பத்த வைக்கின்றான்.

அம்மா பசிக்குதம்மா மனோவின் தங்கையின் குரல் கேட்கிறது. கொஞ்சம் பொருமா சாப்பாடு தாறேன். அன்றைத் தினம் முடிந்து விட்டது. இனி நாளையப் பொழுது? அம்மா இனி நாம இப்படி கஸ்டப்பட வேணாம்மா நம்ம மரக்கறித் தோட்டத்தை செய்வோம். அப்ப நமக்கு கஸ்டம் வராது என்று மனோ தாயின் மடியில் படுத்துக் கொண்டு சொல்வதைக் கேட்டத் தாய்க்கு வாழ்க்கையில் ஒரு புது தெம்பு கிடைக்கின்றது.



உத்தரப்பிரதேசம்

திரிவேணி சங்கமத்தில்

# “பக்தர்கள் நீராட வேண்டாம்”

திரிவேணி சங்கமத்தில் பக்தர்கள் நீராட வேண்டாம் என, அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“பிரயாக்ராஜுக்கு வரும் பக்தர்கள், உங்களுக்கு அருகிலுள்ள கங்கை ஆற்றில் நீராடுங்கள். திரிவேணி சங்கமம் நோக்கிச் செல்ல முயற்சிக்காதீர்கள். நீங்கள் அனைவரும் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஏற்பாடுகளை செய்வதில் ஒத்துழைக்க வேண்டும். சங்கத்தின் அனைத்து படித்துறைகளிலும் மக்கள் அமைதியாக குளித்து வருகின்றனர். எந்த வதந்திகளுக்கும் கவனம் செலுத்த வேண்டாம்” என பதிவிட்டுள்ளார்.



உத்தரப்பிரதேசம்

மகா கும்பமேளாவில் கூட்ட நெரிசல்:

# 15 பேர் உயிரிழப்பு



மகா கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில், 15 பேர் உயிரிழந்துள்ளனர் 30 பேர் காயமடைந்தனர்.

உலகின் மிகப்பெரிய ஆன்மிக சங்கமமாக மகா கும்பமேளா திகழ்கிறது. உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. உலகம் முழுவதும் இருந்து கோடிக்கணக்கான மக்கள் பிரயாக்ராஜில் திரண்டு அங்குள்ள உள்ள திரிவேணி சங்மத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இந்நிலையில், மகா கும்பமேளா நிகழ்ச்சியில், நேற்று (29) அதிகாலை திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அமாவாசை தினமான நேற்று மகா கும்பமேளாவில் உள்ள திரிவேணி சங்கமத்தில் நேற்று அதிகாலை புனித நீராட ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

அப்போது திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த கூட்ட நெரிசலால் பலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தனர். இதனால், ஒருவர் மீது ஒருவர் விழுந்துள்ளனர். இந்த சம்பவத்தில் 30 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் பெண்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார், மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், குறைந்தது 15 பேர் உயிரிழந்ததாக அங்கு சிகிச்சையில் ஈடுபட்டுள்ள வைத்தியர் ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தோர் குறித்து மட்டுமே அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். உயிரிழப்புகள் அதிகாரபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகம்

# சீமான் மீது வழக்கு பதிவு நாம் தமிழர் கட்சி



தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தி.மு.க. சார்பில் வேட்பாளர் வி.சி. சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி ஆகியோர் போட்டியிடுகிறார்கள். தி.மு.க. உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறது. நாம் தமிழர் கட்சிக்கு ‘மைக்’ சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு இன்னும் 7 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், தி.மு.க. வேட்பாளர் பிரசாரத்தை தொடங்கி பல்வேறு பகுதிகளிலும் வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் சேகரித்து வருகிறார். அதைபோல நாம் தமிழர் கட்சி வேட்பாளரும் ஓட்டுவேட்டையாடி வருகிறார்.

இந்த நிலையில், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு இடைத்தேர்தலையொட்டி அனுமதிக்கப்பட்டதை விட கூடுதல் நேரம் பொதுக்கூட்டம் நடத்தியதாக சீமான் மீது பறக்கும் படை அதிகாரி நவீன் அளித்த புகாரில் கருங்கல்பாளையம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கெனவே தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் மீது 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொங்கோ

சிறைச்சாலையில் இருந்து

# 6,000 கைதிகள் தப்பியோட்டம்



கிளர்ச்சியாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் முன்செஸ்க் நகரில் உள்ள சிறைச்சாலையில் இருந்து 6,000 கைதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

கிழக்கு ஆப்பிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் பொதுமக்களை குறிவைத்து எம்-23 என்ற கிளர்ச்சி குழு அடிக்கடி தாக்குதல் நடத்துகிறது. அவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையாக போராடி வருகிறது.

இதற்கிடையே, கடந்த வாரம் கோமா நகரில் ஊடுருவிய கிளர்ச்சியாளர்கள் அங்கு சரமாரி தாக்குதல் நடத்தினர். இதில் ஐ.நா.வின் அமைதிப்படை வீரர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

இதன் தொடர்ச்சியாக முன்செஸ்க் நகரில் உள்ள சிறைச்சாலை பகுதியிலும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது சிறை காவலர்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் நடைபெற்றது.

இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அங்கிருந்த கைதிகள் அனைவரும் தப்பி ஓட்டம் பிடித்தனர். இதில் சுமார் 6,000 கைதிகள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக, அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

அமெரிக்கா

# பெஞ்சமினுக்கு ட்ரம்ப் அழைப்பு

வெள்ளை மாளிகைக்கு வருமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனை இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. இதனை வெள்ளை மாளிகை அதிகாரியும் உறுதிப்படுத்தியுள்ளார். அதன்படி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, அடுத்த வாரம், ட்ரம்பை வெள்ளை மாளிகையில் வைத்து சந்திக்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்றதும் அவரை சந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முதல் சர்வதேச தலைவர் பெஞ்சமின் நேதன்யாகு ஆவார் என்று, இஸ்ரேல் பிரமதர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் சிலம்பம், கராத்தேயில்

# வடக்கு மாணவர்கள் 36 பிரிவுகளில் சாதனை













■ புகழிந்தன்

இந்தியா மதுரையில் நடைபெற்ற சிலம்பம் மற்றும் கராத்தே போட்டிகளில் 36 முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் மானிப்பாய் அன்னை மரியாள் ஆலயத்திற்கு முன்பாக புதன்கிழமை( 28) இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சிவலீமன் சிலம்ப கழக மாணவர்களும் பாபு இஷின் ரியூ கராத்தே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கிய 20 பேர் கொண்ட குழு இந்தியா மதுரையில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டியில் பங்கு பற்றினர்.

போட்டியில் பங்கு பற்றிய வடக்கு மாணவர்கள் 36 முதல் இடங்களையும் 08 இரண்டாவது இடங்களையும், 05 மூன்றாவது இடங்களையும் பெற்றுக்கொண்டதுடன் 95 கேடயங்களை தம் வசமாக்கிக்கொண்டனர்.

அல் ஹிலாலிருந்து வெளியேறிய பின்னர்

# சன்டோஸில் இணையும் நெய்மர்




பிரேஸிலியக் கால்பந்தாட்டக் கழகமான சன்டோஸிலிருந்து வெளியேறி 12 ஆண்டுகளின் பின்னர் கழகத்தில் இணைய நெய்மர் இணங்கியுள்ளதாக கழகத்தின் தலைவர் மார்செலோ டெய்க்ஸ்ய்ரா செவ்வாய்க்கிழமை (28) தெரிவித்துள்ளார். சவுதி அரேபியக் கழகமான அல் - ஹிலாலுடனான தனது ஒப்பந்தமானது இரு தரப்பு ஒப்புதலுடன் இரத்துச் செய்யப்பட்டதாக 32 வயதான நெய்மர் முன்னர் உறுதிப்படுத்தியிருந்தார்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையி ல்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய ரஷீட்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இங்கிலாந்தின் அடில் ரஷீட் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான முதல் மூன்று போட்டிகளிலும் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ரஷீட், இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை இப்போட்டிகளில் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் வருண் சக்கரவர்த்தி, 30ஆம் இடத்திலிருந்து 25 இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில் இப்போட்டிகளில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் ஜொஃப்ரா ஆர்ச்சர், 19ஆம் இடத்திலிருந்து 13 இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. அடில் ரஷீட், 2. அகீல் ஹொசைன், 3. வனிது ஹசரங்க, 4. அடம் ஸாம்பா, 5. வருண் சக்கரவர்த்தி, 6. ஜொஃப்ரா ஆர்ச்சர், 7. மகேஷ் தீக்ஷன, 8. ரஷீட் கான், அர்ஷ்டீப் சிங், 10. ரவி பிஷ்னோய்.

இதேவேளை துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் இப்போட்டிகளில் 109 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் திலக் வர்மா, மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. ட்ரெவிஸ் ஹெட், 2. திலக் வர்மா, 3. பில் ஸோல்ட், 4. சூரியகுமார் யாதவ், 5. ஜொஸ் பட்லர், 6. பாபர் அஸாம், 7. பதும் நிஸங்க, 8. மொஹமட் றிஸ்வான், 9. யஷஸ்வி ஜைஸ்வால், 10. குசல் பெரேரா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. ஹர்திக் பாண்டியா, 2. டிபேந்திர சிங் ஐரீ, 3. லியம் லிவிங்ஸ்டோன், 4. மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 5. மொஹமட் நபி.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பாகிஸ்தானின் நொமன் அலி, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஒன்பதாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. ஜஸ்பிரிட் பும்ரா, 2. பற் கமின்ஸ், 3. ககிஸோ றபாடா, 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. நொமன் அலி, 6. மார்கோ ஜன்சன், 7. மற் ஹென்றி, 8. நேதன் லையன், 9. பிரபாத் ஜெயசூரிய, 10. இரவீந்திர ஜடேஜா.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 30, ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.